# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**30.07.2021–ம்** தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : D.உஷாராணி.,**
தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்,(பொ)
வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

குறள் :

**கற்க கசடற கற்பவை கற்றப்பின்**
**நிற்க அதற்கு தக.**

102.திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க வந்தவாசி நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கொரோனா விழிப்புணர்வு பிரதி வாரம் 01.08.2021 முதல் 07.08.2021 முடிய ஒரு வாரம் நடைபெறுவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைப்படி வந்தவாசி நகராட்சியில் ஒரு வார காலத்திற்கு (01.08.2021 முதல் 07.08.2021 முடிய) கொரோனா விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.25000/– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண்.1021/2021/எச்1, நாள்.25.07.2021)**

103. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் லக்ஷ்மி நகர் பகுதியில் உள்ள பிரதான சாலையில் மழைநீர் வடிகால் போதிய மட்டம் இல்லாத காரணத்தாலும், ஆழம் அதிகமாக உள்ள காரணத்தாலும் ஆங்காங்கே தேக்கம் அடைந்து நிரம்பி மேலே வழிகின்றது. மேற்படி மழைநீர் வடிகாலினை தரை மட்டத்தை உயர்த்தி (Sill Level raijng) சரிசெய்யவும், மழைநீர் வடிகாலை ஒட்டிய உள்ள சாலைக்கும், தார்சாலைக்கும் இடையே உள்ள இடைவெளி மண்சாலையாக உள்ளதால் மழைநீர் வடிகாலில் செல்லும் மழைநீரானது அதில் உறிஞ்சப்பட்டு சாலை பழுதடைய வாய்ப்புள்ளதால் அப்பகுதியினை சிமெண்ட் சான்கிரீட் கொண்டு நிரப்பவும் பொதுமக்களின் நலன் கருதி மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்துக்கு மன்றத்தில் பொருள் வைக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் பார்வைக்கும் , மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு –

1. மன்ற ஒப்புதலுக்கு .

**(ந.க.எண்.1012/2021/இ1, நாள்.26.07.2021)**

104. வந்தவாசி நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளில் சிறுமின்விசை பம்புகள் மற்றும் கைபம்புகள் இயங்கி வருகின்றன. இதில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் பொதுமக்களின் நலன் கருதி அனைத்து வார்டுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகள் மற்றும் கைபம்புகள் பராமரிக்கவும் மற்றும் பழுதுகள் சரிசெய்யவும் மதிப்பீட்டுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு ன்றத்தில் பொருள் வைக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் பார்வைக்கும் , மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு –

1. மன்ற ஒப்புதலுக்கு .

**(ந.க.எண்.1012/2021/இ1, நாள்.26.07.2021)**

105. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட வார்டுகள் அனைத்திலும் உள்ள தெருக்களில் குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் சரிசெய்யவும், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு ன்றத்தில் பொருள் வைக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் பார்வைக்கும் , மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு –</u>

1. மன்ற ஒப்புதலுக்கு .

**(ந.க.எண்.1012/2021/இ1, நாள்.26.07.2021)**

ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர்

வந்தவாசி நகராட்சி